

மயிலாடுதறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர்கள், மற்றும் அனைத்து இணைத்துறை அலுவலகர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் பால்வலத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ்.ராஜ்குமார், பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அண்ணாதுரை மற்றும் பலர் உள்ளனர்.

### திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.392 கோடி மதிப்பிலான திட்டங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கிவைத்தார்!

திருச்சி, மே 19 -

திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே நேரு அவர்கள் திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 16 17 ஆம் தேதிகளில் ரூபாய் 392 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைத்ததோடு முடிந்த பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்தும் வைத்தார்.

16ஆம் தேதி அன்று ஒருங்கிணைந்த காய்கறி மார்க்கெட் ரேஷன் கடை 2 கிலோமீட்டர் தொலைவிற்கு புறவழிச் சாலை திட்டம் உள்ளிட்ட 321 கோடி மதிப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டில் முடிந்த பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்தார் .

தொடர்ந்து 17ஆம் தேதி அன்று கோரையாறு மற்றும் உய்யக்கொண்டான் கிழக்குக்கரை பகுதியில் ரூபாய் 68 கோடி மதிப்பீட்டில் 2.1 கிலோமீட்டர் தொலைவிற்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை செய்து திட்டங்களை தொடங்கி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்

திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட அரவானூர் மேலபாண்டமங்கலம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினையும், கீரக்கொல்லைத் தெருவில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூபாய் 22.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கழிப்பிடம், சோழராஜபுரம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கழிப்பிடம் வண்டிக்காரத் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும், தெற்கு வெள்ளாளத் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 3.லட்சம் மதிப்பீட்டில் மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தொடர்ந்து புத்தூர் வடக்கு முத்துராஜா தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும், இராமலிங்க நகர் இரண்டாவது பிரதான தெரு பகுதியில் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும், தெற்கு இராமலிங்க நகர் பகுதியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் தொட்டி புத்தூர் அக்ரஹாரம் பகுதியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூபாய் 2.85 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

தொடர்ந்து ராம்நகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலை கடை கட்டிடம் வண்ணாரப்பேட்டை பகுதியில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் ரூபாய் 59 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களையும், இனாம்தார் தோப்பு அண்ணா நகர் முதல் குறுக்குத் தெரு பகுதியில் கல்விநிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி உடற்பயிற்சி மையம் கட்டிடம் அண்ணா நகர் 2வது குறுக்குத் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி மையம் கட்டிடம் புதுமாரியம்மன் கோவில் தெரு பகுதியில் கல்வி நிதியின் கீழ் ரூபாய் 37.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக்கட்டிடத்தையும் பயன்பாட்டிற்காக நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு திறந்து வைத்தார்.

திருச்சி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற விழாக்களில் கீரக்கொல்லை தெரு, காளையான் நாடார்தெரு, கல்லரை மேட்டுத்தெரு, கீழகல்நாயக்கன் தெரு, நோவா காலனி, வண்ணாரப்பேட்டை, கள்ளாங்காடு, எம்.ஜி.ஆர்.நகர், திடீர்நகர், பென்சனர் தெரு, ஆட்டு மந்தை தெரு, சவேரியார் தெரு, பழைய போஸ்ட் ஆபிஸ் தெரு, காஜாமலை லூர்துசாமி பிள்ளை தெரு, மங்கம்மா சாலை, பிள்ளையார் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் நீண்ட நாட்களாக நகர்புற பகுதிகளில் குடியிருந்துவரும் 948 குடியிருப்பு வாசிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் கே.என். நேரு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன். நகரப் பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாவட்ட துணைச் செயலாளர் முத்துசெல்வம் விஜ யா ஜெயராஜ், சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, காஜாமலை விஜய் உட்பட பகுதி செயலாளர்கள் கமால் முஸ்தபா மோகன்தாஸ் நாகராஜ், இளங்கோ, மற்றும் கழக நிர்வாகிகள் கிராப்பட்டி செல்வம், சோழன் சம்பத், முத்துப்பழனி திருநாவுக்கரசு, ஹரி, தனபால் புஷ்பராஜ் ,மூவேந்தரன் மண்டல தலைவர்கள் மாநகராட்சி உறுப்பினர்கள் வட்டச் செயலாளர்கள் மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# தி.மு.க. இளைஞர் அணி

### தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 17 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.4,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஏப்ரல் மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 17 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1 | மு.தீனதயாளன், த/பெ முத்துகிருஷ்ணன், 11, பஜனை கோயில் தெரு, பட்டாபிராம்சத்திரம், ஆவடி, திருவள்ளூர் – 600 099. |
| 2 | சி.சுரேஷ், த/பெ சின்னராமன், அனுமார் கோயில் தெரு, தாராசுரம், கும்பகோணம், தஞ்சாவூர் – 612 702. |
| 3 | அ.நூருல் ஹசன், த/பெ அபுதாகிர் பாஷா, 22–ஏ, செல்லமுத்து வீதி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் – 642 126. |
| 4 | மு.தயாநிதி, த/பெ முனியாண்டி, ஆஸ்பத்திரி 2–வது தெரு, முதுகுளத்தூர், இராமநாதபுரம் – 623 518. |
| 5 | வி.செவ்வந்தி, த/பெ விமல், 380, அம்பேத்கர் நகர், அரூர், தருமபுரி – 636 903. |
| 6 | செ.ஜீவா, க/பெ செந்தில்முருகன், மாரியம்மன் கோயில் வீதி, கோட்டகம், கழுமரம், திருக்கோவிலூர், விழுப்புரம் – 605 754. |
| 7 | ரா.வெங்கடேஷன், த/பெ ராஜு, அம்பேத்கர் தெரு, கொங்கு நகர், திருப்பூர் – 641 607. |
| 8 | மூ.முத்தையா, த/பெ மூக்கன், 128, மேற்கு கருவேலம்பட்டி, கப்பலூர், திருப்பரங்குன்றம், மதுரை – 625 008. |
| 9 | ச.வைரத்தம்மாள், க/பெ சண்முகம், 434, மேற்கு வீதி, அனந்தகோபாலபுரம், பாதிரங்கோட்டை, திருவோணம், தஞ்சாவூர் – 614 614. |
| 10 | ஏ.ராஜலட்சுமி, த/பெ ஏழுமலை, 1/429, சின்ன ஒடிளாபுரம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் – 601 201. |
| 11 | இ.முகமது அனஸ், த/பெ இஸ்மாயில் செரீஃப், 24–டி, வசந்தம் நகர்–2, ஆத்துப்பாலம், கோயம்புத்தூர் – 641 023. |
| 12 | சேரு அம்மாள், க/பெ இரஹ்மத்துல்லா, 32/16, குட்டி கிராமணி தெரு, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028. |
| 13 | ம.முஹமது ஆஷிக், த/பெ மக்புல்லா, 17/1, பத்திரிக்கையாளர் காலனி, பாரதி நகர், சின்னியம்பாளையம், ஈரோடு – 638 104. |
| 14 | ச.விஷ்ணுபிரியா, த/பெ சக்திவேல், 138–ஏ/6, வடக்குத்தெரு, கல்துறை, கோட்டத்துறை, பழனி, திண்டுக்கல் – 624 617. |
| 15 | தீபன்ராஜ், 41/23, நாவிதர் நகர், ஆலப்பாக்கம், வல்லம், செங்கல்பட்டு – 603 003. |
| 16 | கே.முருகையன், த/பெ கேசவன், மாரியம்மன் கோயில் தெரு, மதியனூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி – 606 107. |
| 17 | கோ.விக்னேஷ்பாபு, த/பெ கோபிநாத், 30–பி, 5–வது வீதி, பழமலைநாதர் நகர், விருத்தாச்சலம், கடலூர் – 606 001. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 17-05-2025

கலைஞர் 100 1924 - 2023




தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே திப்பிராஜபுரத்தில் அதிநவீன தொழில்நுட்ப இயந்திரங்களோடு இயங்கி வரும் பால் குளிர்விப்பான் மையத்தில் பால்வளத்துறை அமைச்சர் மனோ.தங்கராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன் பால்வளத்துறை ஆணையர் அண்ணாதுரை, தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் சு.க.முத்துசெல்வம், முன்னாள் கவுன்சிலர் பாண்டியன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் இருந்தனர்.



திருவாரூர் மாவட்ட வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் தண்டலை ஊராட்சியில் மாவட்ட பதிவு அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் நகர ஊரமைப்பு துறையின் சார்பில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கட்டுவதற்காக மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன், வை.செல்வராஜ் எம்.பி., ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகரச் செயலாளர் வாரை.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### நாமக்கல் – கரூர் தேசிய நெடுஞ்சாலை சின்ன வடுகபட்டி அருகில் நிகழ்ந்த

# சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே.19 -

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆத்தூர் கிராமம், நாமக்கல்-கரூர் தேசிய நெடுஞ்சாலை, சின்ன வடுகபட்டி அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆத்தூர் கிராமம், பரணி பார்க் பள்ளியின் கிழக்குப் பக்கம், நாமக்கல் - கரூர் தேசிய நெடுஞ்சாலை, சின்ன வடுகபட்டி அருகில் நேற்று முன்தினம் (17.5.2025) காலை சுமார் 5.30 மணியளவில் பெங்களூருவிலிருந்து நாகர்கோவில் நோக்கிச் சென்ற தனியார் ஆம்னி பேருந்து ஒன்று முன்னாள் சென்ற டிராக்டர் ஒன்றின் மீது மோதி பின்னர் எதிர் சாலையில் கோவில்பட்டியிலிருந்து சேலம் நோக்கி வந்துகொண்டிருந்த மேக்ஸி கேப் வாகனம் ஒன்றின் மீது எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் மேக்ஸி கேப் வாகனத்தில் பயணம் செய்த தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. சசிகுமார் (வயது 52) த/பெ.துரைராஜ், திரு.அருண் திருப்பதி (வயது 45) த/பெ.கனகராஜ், செல்வன். காமாட்சி அஸ்வின் (வயது 10) த/பெ.அருண், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி.எழில் தஷனா (வயது 12) த/பெ.சரவணக்குமார் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி.ஹேமவர்ஷினி (வயது 20) த/பெ.பாண்டியன் என்பவர் சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் 27 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



நாமக்கல் மாநகராட்சி, வசந்தபுரம், வகுரம்பட்டி, மற்றும் மோகனூர் உள்ளிட்ட இடங்களில் ரூ.61.88 இலட்சம் மதிப்பீட்டில் 3 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களைத் திறந்து வைத்து, 2024–25 ஆம் ஆண்டில் அதிகளவில் பால் உற்பத்தி செய்து வழங்கிய முதல் 3 சிறந்த பால் உற்பத்தியாளர்கள் என மொத்தம் 9 நபர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மோகனூர் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.நவலடி, நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், ஆவின் பொது மேலாளர் மரு.ஆர்.சண்முகம், துணை பதிவாளர் (பால் வளம்) ஐ.சண்முகநதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.